2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

டாக்டர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்காக தன்னை அர்ப்பணித்தவர் தேவநேயப் பாவாணர் அவர்கள். அவர் உப்பைப்போல எளிமையானவர், மழை நீரைப்போல சுத்தமானவர். தமிழுக்காக தன்னையே கரைத்துக் கொண்டிருக்கிற தேவநேயப் பாவாணருடைய நினைவு மண்டபம், மதுரையிலே அமைந்திருக்கிறது. அந்த மணி மண்டபத்திலே, போதிய பணியாளர்கள் இல்லையென்று பல முறை தமிழறிஞர்கள் கோரிக்கை விடுத்த நிலையிலும்கூட, கருணாநிதியினுடைய அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆகவே, இந்த நினைவு மண்டபத்தில் போதிய பணியாளர்களை நியமிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நினைவு மண்டபத்தில் பணியாட்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

109—

இரத்த சேமிப்பு வங்கி

***1113—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்ட மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கியை அமைக்கவும், இரத்த தானத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் அரசு ஆவன செய்யுமா?

[2012 ஏப்ரல் 17

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது 41 வட்டார மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இரத்ததான முகாம்கள்மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, இரத்த சேமிப்பு வங்கிகளைப் பேணி வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள், ஒவ்வொரு கூட்டத்திலும் பேச ஆரம்பிக்கிறபோது, 'என்னுடைய இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே', என்றுதான் ஆரம்பிப்பார்கள். நம்முடைய மாண்பிற்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த இயக்கத்தை வலுவோடும், வனப்போடும் கட்டிக் காத்து, அவர் அடியொற்றி புரட்சித் தலைவரின் 'இரத்தத்தின் இரத்தமான என் உடன்பிறப்புகளே' என்று சொல்லித்தான் எல்லாக் கூட்டங்களிலும் தன்னுடைய பேச்சை ஆரம்பிப்பார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தன்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளிலும், மிகவும் எளிமையோடும், அன்போடும் ஏழை மக்களை அணுகுகின்ற விதத்தில், இரத்ததான முகாம்களை நடத்தி வருவது உங்களுக்குக்கூட நன்றாகத் தெரியும். இந்த ஆண்டுகூட, தன்னுடைய பிறந்த நாளை, எளிமையாகக் கொண்டாட வேண்டுமென்று அறிவித்து, தமிழ்நாடு முழுவதும் ஒரு கின்னஸ் சாதனை என்று சொல்லக்கூடிய அளவிற்கு, இரத்ததான முகாம்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள்மூலம் நடத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மத்தியிலே இது மிகப் பெரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. 'இரத்தத்தைக் கொடுங்கள், உயிரைக் காத்திடுங்கள்' என்று சொல்லுகின்ற விதத்தில்,

2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, அனைத்துத் தொண்டர்களும் அந்தப் பணியைச் செய்தார்கள்.

நம்முடைய அரசின் சார்பில், சென்னை நகரம் மற்றும் அதனையொட்டியிருக்கிற பகுதிகளில், குறிப்பாக, I.T.Park–களில் வேலை செய்கிற இளைஞர்களிடம் இதுகுறித்த உற்சாகத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்ற வகையில், இரத்தம் கொடுத்து உயிர் காக்கிற பணிக்காக நடமாடும் இரத்ததான வங்கிகளை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Mobile Blood Bank குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டிய பதிலையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இன்றைக்கு இரத்த அளவின் தேவையைக் கருத்தில்கொண்டு, வட்டார மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையங்களைத் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மற்றும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையத்தின்மூலமும் 17 இரத்த பரிமாற்ற ஊர்திகள் –Blood Transmission Vans வழங்கப்பட்டுள்ளன. இந்த ஊர்திகளின்மூலம் இரத்தம் தேவைப்படும் இடத்திற்கு, தேவையான அளவிற்குக் கொண்டு செல்லப்படுகிறது. மேலும், இதன்மூலம் இரத்த தானம் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.